DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 131/2024 |
| Deposition of Witness for | : | P.W. |
| | : | D.W. |
| | : | R.W.1 |
| | : | Court. |
| Name | : | சரண்குமார் |
| Spouse Name | : | பாஸ்கரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.08.2026

**முதல் விசாரணை:**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்றிதழ் **சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**
2. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை **சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து தொடர்புடைய இருசக்கர வாகனமான TN 63 W 6323 என்ற இருசக்கர வாகனம் விபத்தின்போது எங்கள் நிறுவனத்தில் விபத்து காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தவிவரம் தெரியுமா என்றால் அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டாததாலும் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாலும் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1.எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. எங்கள் காப்பீட்டு நிறுவனம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். TN 63 W 6323 என்ற இருசக்கர வாகனம் விபத்து தேதியான 01.01.2018ம் தேதி எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற ரகு மீது தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் விபத்து சமயத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டு இருந்ததால் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.